# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2263/23 - 2022 ජනවාරි මස 21 වැනි සිකුරාදා - 2022.01.21

*2263/23 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்**
**8(9) ஆம் உப பிரிவின் கீழான அறிவித்தல்**

1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8(9) ஆம் உப பிரிவில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தேர்தல் ஆணைக்குழுவினால் அரசியற் கட்சியொன்றாக அங்கீகரிக்கப்படுவதற்காக வெளியிடப்படும் கட்டளைகளை கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு அறிவிக்கின்றேன்.

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2022, சனவரி 21.


1A - G 35865 — 60 (2022/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8(9) ஆம் உப பிரிவின் கீழ் அரசியல் கட்சியொன்றாக அங்கீகரித்துக்கொள்ளல் தொடர்பாக சொல்லப்பட்ட சட்டத்தின் 7 ஆவது பிரிவில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் சம்பந்தமாக சொல்லப்பட்ட சட்டத்தின் 8(9) ஆம் உப பிரிவின் கீழ் வெளியிடப்படும் கட்டளைகள்.*

| நியதிச் சட்ட ஏற்பாடுகளுக்கிணங்க சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் | | தேர்வளவுகள் |
|---|---|---|
| 1 கட்சியின் யாப்பு | 1.1 | அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டதாக அமைந்திருத்தல் வேண்டும். |
| | 1.2 | அங்கத்தவர்களதும் பதவிதாங்குநர் குழாமினதும் நியமனம், பதவி நீக்கல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பில் இயற்கை நீதிக் கோட்பாடுகளும் சனநாயகமும் பாதுகாக்கப்படும் விதத்திலான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். |
| | 1.3 | அரசியல் கட்சி யாப்பை திருத்துவதற்கான ஏற்பாடுகள் தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். |
| | 1.4 | பொதுக் கூட்டங்கள், விசேட பொதுக் கூட்டங்கள் மற்றும் செயற்குழுக் கூட்டங்களுக்கு அழைப்புவிடுக்கப்படும் காலப்பகுதிகள் தொடர்பாக யாப்பில் குறித்துரைக்கப்பட்டிருத்தல் வேண்டும். |
| | 1.5 | இனம், மதம், மொழி, சாதி, குலம் கோத்திரம் முதலான சமூக பிரிவினைகள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமையக்கூடியவாறான சரத்துக்கள் அல்லது ஏற்பாடுகள் கட்சி யாப்பில் உள்ளடக்கப்படாதிருத்தல் வேண்டும். |
| 2. பதவிதாங்குநர் குழாம் | 2.1 | அரசியல் கட்சி யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான பதவியொன்றுக்கு பெண் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். |
| | 2.2 | அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு முந்திய 04 ஆண்டு காலப்பகுதியினுள் பதவிதாங்குநர் குழாமில் பெண் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். |
| | 2.3 | கட்சியின் பதவிதாங்குநர்கள் குழாமினுள் கூட்டிணையாமல் வேறு கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அலுவலர்கள்/ அங்கத்தவர்கள் இருப்பின், அவர்கள் சம்பந்தமான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும். |
| 3. கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகள் | 3.1 | கட்சிகளைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு முந்திய 04 ஆண்டு காலப்பகுதிக்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயம் அடங்கிய கணக்கறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும். |
| | 3.2 | மேலே 3.1 இன் கீழ் சமர்ப்பிக்கப்படும் கணக்கறிக்கைகள் பதிவு செய்யப்பட்ட கணக்காய்வாளரொருவரினால் கணக்காய்வு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். |
| 4. கட்சியின் நிகழ்கால கொள்கைப் பிரகடனம் | 4.1 | அரசியல் கட்சி யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களையும் நோக்கங்களையும் எய்துவதற்காக தயாரிக்கப்பட்ட கொள்கைப் பிரகடனமொன்றாகவிருப்பது அத்தியாவசியமாகும். |
| | 4.2 | கொள்கை பிரகடனம் கட்சியின் மத்திய செயற்குழு/பதவிதாங்குநர் குழாமின் எளிய பெரும்பான்மையினால் அனுமதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். |

| *நியதிச் சட்ட ஏற்பாடுகளுக்கிணங்க சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்* | *தேர்வளவுகள்* |
|---|---|
| 5. அரசியல் செயற்பாடுகள் | 5.1 அடிப்படையில் நாட்டின் சனநாயகம், வாக்குரிமை, சட்டவாட்சியைப் பாதுகாத்தல் மற்றும் பொதுமக்களின் உரிமைகளுக்காக முனைப்புடன் பங்களிப்புச் செய்த செயற்பாடுகள் ஆற்றப்பட்டிருத்தல் வேண்டும். |

5.2 அரசியல் கட்சியொன்றாக அங்கீகரித்துக்கொள்வதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் இறுதித்திகதிக்கு முந்திய 04 ஆண்டு காலப்பகுதியில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருத்தல் வேண்டும். அந்த 04 ஆண்டு காலப்பகுதியில் ஒவ்வோராண்டிலும் 05 அரசியல் செயற்பாடுகள் வீதமாவது மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, குறித்த ஒவ்வோர் அந்த 05 அரசியல் செயற்பாடுகளில் குறைந்தபட்சம் 02 அரசியல் செயற்பாடுகளேனும் முக்கிய அரசியல் செயற்பாடுகளாக அமைந்திருத்தல் வேண்டும்.

**5.2.2. முக்கிய அரசியல் செயற்பாடுகள்**

i. அரசியல் கட்சிகளை அங்கீகரித்துக்கொள்வதற்காக விண்ணப்பங்களை முன் வைத்துள்ள அரசியல் கட்சி 04 ஆண்டு காலப்பகுதியினுள் சுயேச்சையாக அல்லது வேறு அரசியல் கட்சியொன்றுடன் இணைந்து புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றின் மூலம் கூட்டணியாக தனது வேட்பாளர்களை நிறுத்தி அல்லது யாதேனுமோர் ஆண்டில் யாதேனுமொரு தேர்தலில் சுயேச்சையாக போட்டியிட்டு இருத்தல் வேண்டும்.

தேர்தல் காலப்பகுதி அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளுக்குள் உள்ளடக்கப்படும்போது அத்தேர்தலில் போட்டியிடும் நோக்கமானது இரண்டு ஆண்டுகளுக்கும் பரிசீலிக்கப்படும். ஆயினும் தனியாக அல்லது கூட்டணியாக போட்டியிட்டிருப்பதாக சரியாக உறுதிப்படுத்தப்படின் மாத்திரமே அந்த இரண்டு ஆண்டுகள் பரிசீலிக்கப்படலாம்.

ii. யாதேனுமோர் அரசியல் கட்சி குறித்த ஓர் ஆண்டில் அதன் வருடாந்த சம்மேளனத்தையும் மாவட்ட சம்மேளனங்களையும் நடாத்துதல், கிளைச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருப்பின் அத்துடன் அது உறுதிப்படுத்தப்படின் ஏற்புடைய ஆண்டினுள் முக்கிய அரசியல் செயற்பாடொன்றாக கருதப்படும்.

iii. அரசியல் செயற்பாடுகளிலீடுபடும் யாதேனுமொரு கட்சி அக் கட்சியின் கொள்கைகளையும் அரசியல் செயற்பாடுகளையும் பரப்பீடு செய்யும் நோக்கில் கடந்த 04 ஆண்டு காலப்பகுதியினுள் தொடர்ச்சியாக செய்திப் பத்திரிகைகளை அல்லது சஞ்சிகைகளை அச்சிட்டிருத்தல் முக்கிய அரசியல் செயற்பாடொன்றாகக் கருதப்படும்.

iv. யாதேனும் தேசிய அல்லது சமூக ரீதியிலான பிரச்சினையொன்று சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவாறான தேசிய ரீதியான பல்வேறு செயற்பாடுகளில் குறித்த ஆண்டு முழுவதும் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

v. தேசிய ரீதியில் நாடு பூராவும் குறித்த அரசியல் கட்சியின் கொள்கைப் பிரகடனங்களையும் மூலக்கோட்பாடுகளையும் கருத்துக்களையும் சமூகமயப்படுத்துவதற்காக தொடர்ச்சியான வேலைத்திட்டமொன்றை குறித்த ஆண்டு முழுவதும் நடைமுறைப்படுத்தியிருத்தல் முக்கிய அரசியல் செயற்பாடொன்றாகக் கருதப்படும்.

**5.2.3. வேறு அரசியல் செயற்பாடுகள்**

i. அரச கொள்கைகளுக்கமைய ஏற்புடைய கட்சி சார்பான அல்லது எதிரான செயற்பாடுகளில் முனைப்புடன் ஈடுபட்டிருத்தல் வேறு அரசியல் செயற்பாடொன்றாகக் கருதப்படும்.

| *நியதிச் சட்ட ஏற்பாடுகளுக்கிணங்க சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்* | *தேர்வளவுகள்* |
|---|---|

ii. பொதுமக்களின் உரிமைகளுக்காக முனைப்புடன் தோற்றுவதற்கான செயற்பாடுகள் வேறு அரசியல் செயற்பாடொன்றாகக் கருதப்படும்.

iii. நாட்டின் சனநாயகம், வாக்குரிமை மற்றும் சட்டவாட்சியைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்படும் பல்வேறு கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் அல்லது அதனோடு தொடர்புடைய வேறு செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேறு அரசியல் செயற்பாடொன்றாகக் கருதப்படும்.

iv. நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு குறித்த கட்சி செயற்பாட்டாளர்களையும் பொதுமக்களையும் அறிவுறுத்துவதற்கான செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்தல் வேறு அரசியல் செயற்பாடொன்றாகக் கருதப்படும்.

v. யாதேனுமொரு தேர்தலின்போது வெற்றியீட்டியுள்ள வேட்பாளர்கள் அக்கட்சியின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக குறித்த மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களினுள் செயற்படுதலும் குறித்த ஆண்டுக்குரிய கட்சியின் வேறு அரசியல் செயற்பாடொன்றாகக் கருதப்படும்.

vi. யாதேனுமோர் அமைப்பு அதனோடிணைக்கப்பட்ட தொழில், இளைஞர், மகளிர் முதலான அமைப்புக்களை தொடர்ந்தேர்ச்சியாக பராமரித்து அலுவல்களை மேற்கொள்ளுமாயின் அத்துடன் குறித்த அமைப்புக்கள் குறித்த அரசியல் கட்சியினால் வழிநடாத்தப்படுவதாக உறுதிப்படுத்தப்படுமாயின் அவை அக்கட்சியுடன் தொடர்புடைய வேறு அரசியல் செயற்பாடொன்றாகக் கருதப்படும்.

vii. கட்சியின் பெயரில் காணப்படும் சமூக வலையமைப்புக்களின் தனிப்பட்ட கணக்குகளின் அல்லது வரையறுக்கப்பட்ட குழுமங்களின் ஊடாக கட்சியின் கருத்துக்களைப் பரப்பீடு செய்தல் குறித்த ஆண்டுடன் தொடர்புடைய அரசியல் ரீதியிலான செயற்பாடுகளாக இருப்பினும் அவை முக்கிய அரசியல் செயற்பாடுகளாக கருதப்பட மாட்டாது. கட்சி செயற்பாட்டாளர்களின் தனிப்பட்ட பெயரில் பராமரிக்கப்படும் சமூக வலையமைப்பு கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை கட்சி செயற்பாடுகள் தொடர்பான சாட்சிகளாக பெற்றுக் கொள் ள முடியுமாகவிருப்பினும், அந்த தனிப்பட்ட பெயரிலான கணக்குகள் பராமரிக்கப்படுவதனை கட்சியின் அரசியல் செயற்பாடொன்றாகக் கருத முடியாது.

viii. கட்சியின் யாதேனும் குறித்துரைக்கப்பட்ட தலைவரொருவரினால் அல்லது பதவி தாங்குநரொருவரினால் கட்சியின் பெயரில் பல்வேறு விடயங்களுக்காக வழக்கமாக அச்சு இலத்திரனியல் ஊடகங்கள் அல்லது சமூக வலையமைப்புக்களினூடாக அறிவித்தல்களை வெளியிடுவதை அல்லது ஊடக கலந்துரையாடல்களை தொடர்ந்தும் நடாத்துவதை குறித்த ஆண்டிற்கான கட்சியின் செயற்பாடொன்றாக கருத முடியுமாகவிருப்பினும் பொதுமக்களின் பங்கேற்பின்றி அல்லது தளத்தில் எந்தவொரு செயற்பாடுமின்றி ஊடக அறிவித்தல்களை வெளியிடுவதை அல்லது ஊடக கலந்துரையாடல்களை நடாத்துவதை மாத்திரம் தொடர்ந்தேர்ச்சியான அரசியல் செயற்பாடுகளாக கருதப்பட மாட்டாது.

| *நியதிச் சட்ட ஏற்பாடுகளுக்கிணங்க சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்* | | *தேர்வளவுகள்* |
|---|---|---|
| | ix. | தேசிய அல்லது சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்கு எழுத்துமூலம் விளக்கமளிப்பது மாத்திரம் கட்சியின் அரசியல் செயற்பாடாக கருதப்பட மாட்டாது. இருப்பினும் அவ்வாறான பல்வேறு விடயங்களின்போது இவ்வாறாக கடிதங்கள் நிதமும் ஒப்படைக்கப்படுதலானது குறித்த ஆண்டினுள் ஊடக அறிவித்தல்களை வெளியிடுவதாகக் கருதி செயலாற்றப்படும். |
| | x. | வேறு அரசியல் கட்சிகளின் ஆண்டு நிறைவு வைபவங்கள் அல்லது வருடாந்த சம்மேளனங்களுக்காக அழைப்பு விடுக்கப்படல் அல்லது அவற்றில் பங்கேற்றல் அரச உற்சவங்கள் அல்லது அரசாங்கக் கூட்டங்களில் பங்கேற்றல் கட்சியின் அரசியல் செயற்பாடொன்றாகக் கருதப்பட மாட்டாது. |
| | xi. | சூழல், சமயம், நலனோம்புகை, சமூக சேவை, தொழிற்சங்கம் போன்ற ஒரு துறையில் மாத்திரம் ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்புக்களின் அந்த விடயத்தோடு தொடர்புடைய செயற்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்படுவது தொடர்ந்தேர்ச்சியான அரசியல் செயற்பாடாக கருதப்பட முடியாது. யாதேனுமோர் அமைப்பு ஓராண்டினுள் சூழல் அல்லது நலனோம்புகை அல்லது சமூக சேவை அல்லது தொழிற்சங்க செயற்பாடுகள் சிலவற்றையும் வேறு அரசியல் செயற்பாடுகளையும் மேற்கொண்டிருப்பின் குறித்த ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட குறித்த சூழல் சார்ந்த செயற்பாடுகள் சிலவற்றையும் வேறு அரசியல் செயற்பாடுகளையும், மேற்கொண்டிருப்பின், ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட குறித்த சூழல்சார் செயற்பாடுகள் அல்லது தொழில்சார் செயற்பாடுகள் அல்லது நலனோம்புகைசார் செயற்பாடுகள் அல்லது சமூக சேவைசார் செயற்பாடுகள் அல்லது தொழில்சார் செயற்பாடுகளை குறித்த ஆண்டுடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட்ட ஓர் அரசியல் செயற்பாடாகக் கருத முடியும். மேலும் வேறு அரசியல் செயற்பாடுகளுடன் இவ்வாறான சில துறைகளின் செயற்பாடுகளை மேற்கொண்டிருப்பின் குறித்த துறையுடன் தொடர்புடைய செயற்பாடுகளை ஒன்றிணைக்கப்பட்ட குறித்த அத்துறைக்கான தனித்தனி செயற்பாடுகளாகக் கருத்திற் கொள்ளப்படும். |
| | xii. | யாதேனுமோர் அமைப்பு அரசியல் செயற்பாடுகளின் ஒரு பகுதியாக சமூக சேவை நடவடிக்கைகளில் அல்லது சமூக நலனோம்புகை செயற்பாடுகளில் அல்லது சூழல் பாதுகாப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதை முன்வைக்குமாயின் அவ்வாறான செயற்பாடுகள் நாடுதழுவிய அளவில் மேற்கொள்ளப்படாதிருப்பின் குறைந்தபட்சம் தேர்தல் மாவட்டமொன்றை அல்லது நிருவாக மாவட்டமொன்றை முழுமையாக உள்ளடக்குகின்றவாறு அச்செயற்பாடுகளிலீடுபட்டிருப்பின் மாத்திரம் அத்தகைய செயற்பாடு அரசியல் செயற்பாடுகளாக கருதப்பட வாய்ப்புள்ளது. உதாரணமாக : தேர்தல் மாவட்டமொன்றின் சில கிராமங்களை மாத்திரம் உள்ளடக்கும் வகையில் சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை அரசியல் செயற்பாடொன்றாகக் கருத முடியாது. |
| 6. சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள். | 6.1 | தேர்தல் ஆணைக்குழுவினால் கோரப்படுகின்றவிடத்து மேற்குறித்த அனைத்து செயற்பாடுகளையும் உறுதிப்படுத்துவதற்கு முறைப்படியான ஆவணங்களை/ அறிக்கைகளை சமரப்பிப்பது கட்டாயமானதாகும். |

EOG 01 - 0208

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.